பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 23 சனிக்கிழமை 09.10.2021 கதிர் 202

## மனைவி படுகொலை; கணவன் சிக்கினார்!

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை மாவட்டம், புளத்சிங்கள பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## யாழ். நல்லூர் ஆலயத்தின் நிர்வாகி மாப்பான முதலியார் காலமானார்!



யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியான இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் காலமானார்.

1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி பிறந்த குமாரதாஸ் மாப்பாண முதலியார், தனது 92 ஆவது வயதில் இன்று காலமாகியுள்ளார்.

1964ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ☞2

## மாப்பாண முதலியாரின் மறைவு தமிழர்களுக்குப் பாரிய இழப்பு!

### யாழ். மாநகர மேயர் இரங்கல்

யாழ். நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பானது தமிழர்களாகிய எமக்குப் பாரிய இழப்பு என்று யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அவரது இறுதிக் காலத்தில் அவரோடு பழகும் வாய்ப்பும் அவரிடம் ஆசீர்வாதம் பெறும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. ☞2



# குருநகர் மீனவர் மீதான தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு!

### குற்றவாளியான இந்திய மீனவரைக் கைதுசெய்யுமாறும் வலியுறுத்து

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம், குருநகர் மீனவரின் படகு மீது தாக்குதல் மேற்கொண்ட இந்திய மீனவரின் படகு மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று இராமேஸ்வரம் துறைமுக விசைப்படகு மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.**

**குருநகரில் இருந்து கடந்த 2ஆம் திகதி தொழிலுக்குப் புறப்பட்ட மீனவரின் படகு மீது இந்திய மீனவரின் ட்ரோலர் மோதி சேதப்படுத்தி தாக்கியதால் இலங்கை மீனவரின் படகு சேதமடைந்ததோடு மீனவரும் படுகாயமடைந்திருந்தார். இதனால் தொழில் இழந்த நிலையில் குருநகர் மீனவர் கரை திரும்பி சங்கத்தில் முறையிட்டார்.** ☞2

## 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து இருவர் சாவு

பதுளை, ஹெலி - எல பகுதியிலுள்ள ரிலா எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்ற இரு இளைஞர்கள், நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து தவறி விழுந்து பலியாகியுள்ளனர்.

நேற்றிரவு இடம்பெற்றுள்ள இந்த அனர்த்தத்தில் வீரகெட்டிய, தெஹியத்தகண்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 36 வயதுகளுடைய நபர்களே உயிரிழந்துள்ளனர்.

ரிலா எல்ல நீர்வீழ்ச்சிக்கு அருகே நேற்றிரவு நான்கு இளைஞர்கள் மது ☞2

## சுமந்திரன், சயந்தன் அ'புரத்தில் தமிழ்க் கைதிகளுடன் சந்திப்பு

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இன்று பகல் நேரில் சென்று சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும், சட்டத்தரணி கேசவன் சயந்தனும் அக்கைதிகளுடன் நீண்ட நேரம் உரையாடி மேலதிக சத்திய பிரமாண பத்திரங்களை பெற்றுக்கொண்டனர்.

இந்தப் பத்திரங்களை உறுதிப்படுத்துவதற்காக சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளரும் சமாதான நீதிவானுமாகிய கந்தையா வாமதேவனும் அவர்களுடன் அநுராதபுரம் சிறைக்குச் சென்றிருந்தார். அமைச்சர் லொஹான் ரத்வத்தை தமிழ் அரசியல் கைதிகளை ☞2



## மேலும் 76 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 76 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் ☞2

## 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸாக பைஸர்!

### விரைவில் தடுப்பூசி வழங்க ஏற்பாடு



நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் ஒரு கோடி 45 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் பெறப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

## மாகாண முதலமைச்சர் பதவிக்காக எம்.பி. பதவியைத் துறக்கும் மூவர்!

2022 முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தற்போது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மூவர் இராஜிநாமா செய்வார்கள் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் கட்சி தலைமைகளுக்கு முன்கூட்டியே அவர்கள் அறிவித்துவிட்டனர் எனவும், மாகாண முதலமைச்சர் பதவியை இலக்குவைத்தே அவர்கள் களமிறங்கவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

பதுளை, பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவரே இவ்வாறு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரும் சவாலை ஏற்று மாகாண முதலமைச்சர் பதவிக்காகப் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுமிக்கு வாயில் சூடுவைத்த தாய்!



**(ந.லோகதயாளன்)**

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட விநாயகர் குடியிருப்புப் பகுதியில் சிறுமிக்கு ☞2

## மாப்பாண முதலியாரின் மறைவு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மிகச்சிறந்த பண்பாளன்; எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச் சிறந்த மனிதன்; மிகச்சிறந்த நிர்வாகி அவர்.

அவர் எம்மை விட்டுப் பிரிந்தபோதும் அவருக்கு நிகரான அல்லது ஒருபடி மேலான தனது புதல்வனை எமக்குத் தந்திருக்கின்றார்.

இன்று யாழ். மாநகர சபை தற்காலிகமாக இயங்குகின்ற இடம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு உரித்தான இடம். போரினால் நகரில் இருந்த மாநகர சபைக் கட்டடம் இடிந்து அழிந்தபோது அதனைத் தற்காலிகமாக இயக்க ஓர் இடம் தேவைப்பட்டது. அந்த இடத்தை இலவசமாக மாநகர சபைக்குத் தந்துதவியவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரே ஆவார்.

யாழ். நகரில் தற்போது மிகக் கம்பீரமாகக் கட்டி எழுப்பப்பட்டுவரும் மாநகர சபைக்கான நகர மண்டப கட்டடத் தொகுதி இலங்கையின் மிகச்சிறந்த கட்டட கலை வல்லுநர்களில் ஒருவரான இவரது புதல்வனின் வடிவமைப்பிலேயே அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசால் கட்டி முடிக்கப்பட்டு மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தின் வடிவம் தொடர்பில் கட்டட கலை நிபுணர்களிடையே ஒரு போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியாளர்களுக்கு மத்தியில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நடுவர்களுள் ஒருவராகவும் இவரது புதல்வன் செயற்பட்டார்.

யாழ். மாநகர சபைக்கும் நல்லூர் உற்சவ காலத்துக்குமான தொடர்பு விவரிக்க வேண்டிய ஒன்றல்ல.

அந்தவகையில் மாநகர சபைக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்குமான பந்தம் நீண்டது; ஆழமானது.

அந்தவகையில் அவரது இழப்பு தமிழர்களாகிய எமக்குப் பாரிய இழப்பு. அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், பக்தர்கள் அனைவருக்கும் எனதும் மாநகர சபையினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன் - என்றுள்ளது.

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தத் தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மீனவர்கள் இணைந்து போராட்டத்திலும் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட மீனவருக்கு இழப்பீடு வழங்குமாறும், இவ்வாறானா சம்பவங்கள் இடம் பெறாமல் இருப்பதனை உறுதி செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் தமிழகம் - இராமேஸ்வர மீனவர்கள் இன்று முற்பகல் 11 மணி முதல் குருநகர் மீனவரின் படகை மோதிய இந்திய மீனவரைக் கைதுசெய்து அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், குருநகர் மீனவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

## மனைவி படுகொலை; ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோட்டா வீதி, கோவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துக்கு வழங்கப்பட்டத் தகவலுக்கு அமைவாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக ஹொரண வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 200 அடி பள்ளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அருந்தியுள்ளனர். இதையடுத்து குறித்த இரு இளைஞர்களும் மதுபோதையில் நீர்வீழ்ச்சியைக் காணச்சென்றுள்ளனர். அதன்போது நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்து இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சிறுமிக்கு வாயில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நெருப்பால் சுட்ட தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாயார் சமைத்து வைத்த உணவின் அப்பளத்தை 5 வயது சிறுமி தாயாருக்குத் தெரியாமல் எடுத்துச் சாப்பிட்டுள்ளார்.

இந்தக் காரணத்தால் தாயார் பெற்ற மகளுக்கு வாய்ப்பகுதியில் நெருப்பால் சுட்டுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த சிறுமியின் பேரன் அக்கராயன் பொலிஸாருக்குத் தக வல் வழங்கியுள்ளார்.

குறித்த தகவலுக்கமைய தாயார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை தொழிலுக்குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மேலும் 76 .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை 80 ஆயிரத்து 360 ஆக உயர்வடைந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து நேற்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 150 வாகனங்களில் பயணித்த 232 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## சுமந்திரன், சயந்தன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அச்சுறுத்தினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக அந்த கைதிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாகவே மேற்படி மேலதிக சத்தியப்பிரமாண பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவை வரும் வாரத்தில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஒட்டி மேலதிக ஆவணங்களாகத் தாக்கல் செய்யப்பட இருக்கின்றன.

## யாழ். நல்லூர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
15ஆம் திகதி முதல் இறுதிக் காலம் வரையில் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் நிர்வாக அதிகாரியாக இவர் பணியாற்றி வந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கல்வி இழப்பை ஈடு செய்வோம்

நமது மாணவர்களின் கல்வி தொடர்பான விவகாரம் 'சாண் ஏற முழம் சறுக்கும்' விடயமாக உள்ளது. கொரோனாப் பேரிடர் தொற்றுக் காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் மாணவர்களின் வகுப்பறை கல்வி முடங்கிப் போய்விட்டது.

கொரோனாத் தொற்றுப் பேரிடர் நெருக்கடியிலிருந்தும் முடக்கத்திலிருந்தும் மிக மந்தமாகவே நாடு நிமிர்கிறது. இந்தச் சூழ்நிலையில் மாணவர்களின் வகுப்பறை கல்வியையும் சிறிது சிறிதாக மேம்படுத்துவது குறித்து சிந்திக்கப்படுகின்றது.

இந்த ஆண்டுக்கான மாணவர்களின் பொதுப் பரீட்சைகள் பல நடத்தப்பட முடியாமல் இன்னும் நிலுவையில் நிற்கின்றன. அவற்றுக்குரிய வகுப்பறைக் கல்விப் போதனைகள், பாடத்திட்டங்கள் முடிவடையாத நிலையில் பரீட்சைகளை எப்படி நடத்துவது என்பதுதான் கேள்வி.

அடுத்த மாதம் தொடக்கம் அடுத்து வரும் மூன்று, நான்கு மாதங்களும் வகுப்பறைக் கல்வியை மும்முரமாக முன்னெடுத்து, அதன் பின்னர் அடுத்த ஆண்டு முற்பகுதியில் இவ்வாண்டுக்கான பொதுத் தேர்வுகளை நடத்தினால் என்ன என்று ஆராயப்படுகின்றது.

அதற்கு வகுப்பறைக் கல்வியை முழுமையாகவும் முழுவீச்சிலும் நடத்த வேண்டிய தேவை உள்ளது. ஆனால், அதற்கு எதிரான இடர்பாடுகள் தொடர்ந்தும் தென்படத் தொடங்கியுள்ளன.

கொரோனா வைரஸிலிருந்து மீண்டு, வகுப்பறைக் கல்வியை விட மும்மரமாக தொடங்குவோம் என்றால் அதற்கிடையில் ஆசிரிய தொழிற்சங்கங்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு போர்க்கொடி தூக்கி நிற்கின்றன.

அரசு வரும் 21ஆம் திகதி அளவில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிடுகின்றது.

ஆனால் அத்திகதிக்குள் அதிபர்கள், ஆசிரியர்கள் சம்பள வேறுபாட்டுப் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு காணாவிட்டால் பணிக்குத் திரும்ப மாட்டோம் என ஒற்றைக்காலில் அடம் பிடிக்கின்றன அவர்களின் தொழிற்சங்கங்கள்.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்காத மாதிரி, வகுப்பறை கல்வியை மீள ஆரம்பிப்பதற்கு கொரோனா வைரஸ் அடங்கி வாய்ப்புக் கொடுத்தாலும், ஆசிரிய தொழிற்சங்கங்கள் இடம் கொடுக்க மாட்டா என்ற இக்கட்டு நிலைமை.

எடுத்த எடுப்பிலேயே அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீது குறை கூற முடியாது. அவர்களும் தங்களின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் இல்லை என்று உறுதியாக நிற்கின்றார்கள்.

எது, எப்படி என்றாலும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதமரையும் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் நேரடியாக சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றனர். அப்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று எட்டப்படும் என நம்புகின்றோம்.

அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளும் பொறுப்புடன் நடந்து கொள்வர் என்று எதிர்பார்க்க முடியும்.

மாணவர்களின் கல்வி சுமார் ஒன்றரை வருடங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது, அதன் பெறுபேறு மோசமானது என்ற உண்மை எல்லோரிலும் பார்க்க அதிபர் ஆசிரியர்களுக்கு நன்கு தெரியும். அதன் தாக்கங்களையும் விளைவுகளையும் ஏனையோரை விட அதிகம் புரிந்தவர்கள் அவர்களே. கிடைக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி, இதுவரையான கல்விப் போதனை இழப்பை எப்படி நிவர்த்தி செய்து சரிக்கட்டலாம் – சரிகட்ட வேண்டும் – என்ற புரிதல் ஏனையோரை விட அவர்களுக்கு அதிகம் இருக்கும்.

தவிரவும், இந்த ஒன்றரை ஆண்டுகளாகப் பாடசாலைகள் இயங்காத போதிலும், எந்தப் பிடித்தமும் வெட்டுமின்றி முழு சம்பளத்தையும் ஒழுங்காக பெற்ற பொறுப்புணர்வு– கடமையுணர்வு– சமூக நன்றியுணர்வு – அவர்களுக்கும் இருக்கும்.

அதனால், ஒரு புறம் தமது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காண முழுமூச்சில் அவர்கள் நின்றாலும், மறுபுறம் மாணவர்களின் இழந்த கல்வியை, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அதி உச்சமாக ஈடு செய்யவும் அவர்கள் பின் நிற்கார் என்று நம்புகிறோம்.

# காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கு மின்சாரக் கார்களுக்கு முன்னுரிமை!

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்



நாட்டில் காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில் மின்சாரக் கார்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகளை வழங்கும் பசுமைப் பொருளாதாரம் குறித்த ஜனாதிபதி செயலணியின் இராஜாங்க அமைச்சரவை உபகுழுவில் உரையாற்றிய அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் -

இதற்காக அமைச்சரவை பத்திரத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், மின்சார பஸ்களை பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்துவதிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் கூறினார். தற்போது, தனியார் துறை பல்வேறு இடங்களில் சுமார் 400 மின்னேற்றும் நிலையங்களை அமைத்துள்ளது. அந்த எண்ணிக்கையை மேலும் 350 அல்லது அதற்கு மேற்பட்டதாக அதிகரிக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

தற்போது ஒரு முறை சார்ஜ் செய்த வாகனமொன்று பயணிக்கக் கூடிய ஆகக்கூடிய தூரம் 300-350 கிலோ மீற்றர் ஆகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஏழாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம்; பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு முன்வைப்பு

யாழ்ப்பாணம் - ஏழாலை பகுதியில் தாக்குதல் நடத்த வந்தவரை மூன்று நாள்களுக்குள் கைது செய்வோம் எனவும் தமக்கு உரிய பாதுகாப்பை தருகிறோம் எனவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற விசாரணையில், பாதிக்கப்பட்ட தரப்பினரும் பொலிஸாரும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்தனர்.

குறித்த விசாரணையைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே பாதிக்கப்பட்டவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

ஏழாலையில் கடந்த 4 ஆம் திகதி இரவு, வீடொன்றினுள் புகுந்த சிலர் அங்கிருந்தவர்களைத் தாக்கினர். இதன்போது தாக்குதல் மேற்கொண்டவர்களை, சிலர் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலை வில்வம் பழ யோக்கட் உரிமம் உள்ளூர் உற்பத்தி நிறுவனத்திடம் கையளிப்பு







யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தால் உருவாக்கப்பட்ட வில்வம் பழத்தின் குணநலனைக் கொண்ட யோக்கட் பானத்துக்கான உற்பத்தி உரிமம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வில்வம் பழ யோக்கட் பானத்தின் கண்டுபிடிப்பாளர் உரிமத்தைக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சார்பில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், உற்பத்தி உரிமத்தைப் பெற்றுக்கொண்ட முல்லை பால் பொருள் உற்பத்தி நிறுவனத்தின் சார்பில் அதன் நிறுவுநர் சி.தவசீலனும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி சீ.வசந்தரூபா, பயிரியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், தொழில் நுட்ப பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சி. சிவச்சந்திரன், வணிக இணைப்பு அலகின் பணிப்பாளர் கலாநிதி தம்பு ஈஸ்வரமோகன், சட்டத் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி துஷானி சயந்தன், பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமார், லண்டனைச் சேர்ந்த தொழிற்துறை சார் பேராசிரியரும், யாழ். பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகின் ஆலோசனை சபை உறுப்பினருமான பேராசிரியர் எஸ். கணேஷ்ராஜா, யோக்கட்பான கண்டுபிடிப்பாளர் சே.ஆனந்குமார் மற்றும் அவரது குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்த யோக்கட் பானத்தை இயற்கையான வில்வம் பழ பாணியில் இருந்து முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லை பால் பொருள் உற்பத்தி நிறுவனம் வர்த்தக ரீதியில் தயாரிக்க உள்ளது. இது வயிற்றுப்புண் மற்றும் நீரிழிவு நோயைக் குறைக்க உதவுவதுடன் புற்றுநோய், கிருமி தாக்கம், மூட்டுவலி மற்றும் பல நோய்களுக்கான தீர்வைக் கொண்டுள்ளது என்றும், இந்தக் கூட்டு முயற்சி உள்ளூர் உற்பத்திகளையும், உற்பத்தியாளர்களையும் ஊக்குவிப்பதற்கான ஒரு முன்னெடுப்பாக அமையும் என்றும் குறிப்பிடப்படுகிறது.



# ஆப்கானில் மசூதி மீது தற்கொலை தாக்குதல்; 50பேர் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தானில் சிறுபான்மை ஷியா முஸ்லிம்கள் பயன்படுத்தி வந்த மசூதி ஒன்றின் மீது நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையின்போது நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலில் குறைந்தது 50பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வட பகுதியில் உள்ள குண்டூஸ் நகரில் அபாட் மசூதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடந்தபோது மசூதியில் 300க்கு மேற்பட்டவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர் என உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி டோலோ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை இத்தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், தாக்குதல் நடத்தப்பட்டவிதத்தில் ஐ.எஸ்.கே. அமைப்பின் முத்திரைகள் அனைத்தும் தெரிகின்றன.

இந்த அமைப்புதான் ஓகஸ்ட் மாதம் உலக நாடுகள் பல ஆப்கானிஸ்தானை விட்டு அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், காபூல் விமான நிலையத்தில் மோசமான தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தியது.

நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையின்போது நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதாக இருக்குமானால், நாட்டின் வட பகுதியில் அவர்கள் மேற்கொண்ட பயங்கரமான விரிவாக்க நடவடிக்கையாக இது இருக்கும். இதனிடையே இந்த தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

# மாநாட்டுக்கு தலிபான்களை அழைப்பதற்கு ரஷ்யா முடிவு!

ஆப்கானிஸ்தான் மாநாட்டில் பங்கேற்க தலிபான்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என ஆப்கானிஸ்தானுக்கான ரஷ்யத் தூதர் ஸமீர் காபுலோவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஆப்கானிஸ்தானுக்கு நிவாரணப் பொருட்களை எவ்வாறு அளிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது' என கூறினார்.



ஆப்கான் விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பாகிஸ்தான், ஈரான், இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு மாஸ்கோவில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறை நெருக்கடி தொடர்பாக விவாதிப்பதற்காக ஜி-20 நாடுகளின் மாநாடு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டின் தொடர்ச்சியாக, மாஸ்கோவில் ஆப்கான் மாநாடு நடைபெறவிருக்கிறது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, மேற்கத்திய நாடுகள் தங்களது தூதரக அதிகாரிகளை அவசர அவசரமாக திரும்ப அழைத்துக் கொண்ட போதும், காபூலில் ரஷ்யத் தூதரகம் வழக்கம் போல் தொடர்ந்து இயங்கி வருகிறது

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியை ரஷ்யா ஏற்றுக் கொண்டாலும், அந்த ஆட்சிக்கு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் அளிக்காமல் உள்ளது.

கடந்த 1980களில் ஆப்கானிஸ்தானை சோவியத் ஒன்றியம் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற போரில் 20 லட்சம் ஆப்கானியர்கள் உயிரிழந்தனர் 70 லட்சம் பேர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் போரில் 14,000 சோவியத் ஒன்றிய வீரர்களும் உயிரிழந்தனர்.

# அமெரிக்க சீன ஜனாதிபதிகள் ஆண்டிறுதியில் சந்திக்கவுள்ளனர்

உலகின் இருபெரும்பொருளாதார சக்திகளான அமெரிக்கா மற்றும் சீனாவின் ஜனாதிபதிகள் ஆண்டு இறுதியில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சுவிஸ்லாந்தில் நேற்று (வியாழக்கிழமை) அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் மற்றும் சீனாவின் உயர்மட்ட தூதர் ஆகிய இருவரின் சந்திப்பு முடிந்த சில மணி நிலையில், இந்த சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றது.

காணொலி காட்சி மூலம் இந்த சந்திப்பை நடத்துவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன என அமெரிக்க அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் ரோமில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில் சீன ஜனாதிபதி கலந்து கொள்ள



நேரத்திலேயே அமெரிக்க, சீன ஜனாதிபதிகளின் சந்திப்பு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு விவகாரங்களில் கருத்து வேறுபாடு நிலவிவரும் மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஸி ஜின் பிங் கலந்து கொண்டிருந்தால், அங்கேயே இருவர்களுக்கிடையிலான சந்திப்பு நடைபெற்றிருக்கும்.

# அறியப்படாத பொருள் மீது மோதிய நீர்மூழ்கிக் கப்பல்; 15 அமெரிக்க துருப்புக்கள் காயம்!



அமெரிக்காவுக்குச் சொந்தமான அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலொன்று, தெற்கு சீனக் கடல் பகுதியில் அறியப்படாத பொருள் மீது மோதியதில் 15 அமெரிக்க துருப்புக்கள் காயமடைந்துள்ளனர்.

'யு.எஸ்.எஸ். கனெக்டிகட்' என்ற இந்தக் கப்பல் சனிக்கிழமையன்று நீருக்கு அடியில் அந்தப் பொருள் மீது மோதியதாகத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரிகள், இந்த மோதல் எதனால் நடந்தது என்பது குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்று கூறியுள்ளனர்.

எனினும், வீரர்களுக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை மற்றும் கப்பல் இன்னும் முழுமையாக செயற்படுகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'நீர்மூழ்கிக் கப்பல் பாதுகாப்பான மற்றும் நிலையான நிலையில் உள்ளது. யு.எஸ்.எஸ். கனெக்டிகட்டின் அணு உலை ஆலை மற்றும் இடங்கள் பாதிக்கப்படவில்லை மற்றும் முழுமையாக செயற்படுகின்றன' என கூறப்பட்டுள்ளது.

சேதத்தின் அளவு மதிப்பிடப்பட்டு வருவதாகவும், சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

யு.எஸ்.எஸ். கனெக்டிகட் நீர்மூழ்கிக் கப்பல் தற்போது அமெரிக்கப் பிராந்தியமான குவாம்-ஐ நோக்கிப் பயணித்து வருகிறது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்தில் சீனப் போர் விமானங்கள் நுழைந்தன என அப்பிராந்தியத்தில் ஏற்கனவே பதற்றம் உண்டாகி இந்தச் சூழலில் இது நிகழ்ந்துள்ளது.

சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் ஒன்றாக விளங்கும் தெற்கு சீனக் கடல் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 2,631 பாடசாலைகளில் தனியொரு ஆசிரியர் மட்டுமே பணியில்



## யுனெஸ்கோ ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

தமிழகத்தில் உள்ள 59,152 பாடசாலைகளில் 2,631 பாடசாலைகள் தனியொரு ஆசிரியருடன் மட்டுமே செயல்படுகின்றன என யுனெஸ்கோவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ அமைப்பின் 'ஆசிரியர் இல்லை, வகுப்பு இல்லை: இந்தியாவுக்கான கல்வி அறிக்கை - 2021' என்னும் அறிக்கையின் முடிவில் இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் இது 4 சதவீதம் மட்டுமேயென்றாலும் இது கவலை அளிக்கக் கூடிய செய்தி என கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய அரசின் கல்வி பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ், ஆரம்பப் பாடசாலைகளில் 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற அளவில் அவை செயல்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. தமிழகத்தில் 61 சதவீத பாடசாலைகளில் நூலக வசதி உள்ளதெனினும், அவை திருப்திகரமாக இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் 0.54 சதவீதம் ஆசிரியர்களும், அதற்கு மேல் உள்ள பாடசாலைகளில் 0.5 சதவீத ஆசிரியர்களும் குறைந்த கல்வித் தகுதியை உடையவர்களாக உள்ளனர் என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயர்நிலைப் பாடசாலைகளில் 0.24 சதவீத ஆசிரியர்களும், மேல்நிலைப் பாடசாலைகளில் 0.13 சதவீத ஆசிரியர்களும் குறைந்த தகுதியுடையவர்களாக உள்ளனர் என்பது அதிக கவலை தருவதாகவும் அதில் அறிக்கையிடப்பட்டுள்ளது.



# எயார் இந்தியாவை வாங்கியது டாடா அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது

இந்திய அரசுக்குச் சொந்தமாயிருந்த எயார் இந்தியா விமான நிறுவனத்தை டாடா குழுமம் வாங்கியுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசுக்குச் சொந்தமாயிருந்த எயார் இந்தியா, கடந்த சில ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்ட இந்த நிறுவனத்தை ஏலத்தில் விற்பனை செய்ய இந்திய மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி கோரப்பட்ட ஏலத் தொகைகளின் அடிப்படையில் எயார் இந்தியா விமான நிறுவனத்தை டாடா நிறுவனம் வாங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் தனியார் நிறுவனமாக டாடாவால் ஆரம்பிக்கப்பட்ட எயார் இந்தியா நிறுவனம், பின்னர் அரசுடைமையாக்கப்பட்டிருந்தது. 68 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நிறுவனம் மீண்டும் டாடா நிறுவனத்தின் வசமாகிறது. 70,000 கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கிவந்த எயார் இந்தியா நிறுவனம் 18,000 கோடிக்கு ரூபா டாடா சன்ஸ் நிறுவனத்துக்கு விற்கப்பட்டதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ரத்தன் டாடா தனது டுவிட்டர் பதிவில், எயார் இந்தியா நிறுவனத்திற்கான ஏலத்தை டாடா குழுமம் வென்றது பெரும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். எயார் இந்தியா நிறுவனத்தை மீண்டும் கட்டியெழுப்ப கடுமையான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றாலும், விமானத்துறையில் டாடா குழுமத்திற்கு இது ஒரு வலுவான சந்தை வாய்ப்பை வழங்கும் என நம்புகிறேன், என்று தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசின் திட்டங்களை கண்காணிக்க தமிழகத்தில் விசேட குழு அமைக்கப்பட்டது



இந்திய மத்திய அரசின் திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான இந்தக் குழுவில், மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

டி.ஆர்.பாலு, எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், ஆ.ராசா, எம்.செல்வராஜ், பி.ஆர்.நடராஜன், திருநாவுக்கரசர், திருமாவளவன், ரவீந்திரநாத் குமார், நவாஸ் கனி ஆகிய எம்.பிக்களும் குழுவில் இடம்பெற்றுள்ளனர். மாநிலங்களவை உறுப்பினர்களான திருச்சி சிவா, ஆர்.எஸ்.பாரதி, நவநீத கிருஷ்ணன், எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் ஆகியோரும் குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய அரசினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் தமிழகத்தில் முறையாக முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து அறிக்கையிடுவதும், குறித்த திட்டங்கள் சீராக செயல்பட ஆலோசனைகளை வழங்குவதும் இந்தக் குழுவின் பிரதான நோக்கங்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.




# குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்யாமல் கெஞ்சுகிறீர்கள் என நீதிமன்றம் காட்டம்

லக்கிம்பூர் வன்முறையில் விவசாயிகள் உயிரிழந்தமை தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில், லக்கிம்பூரில் விவசாயிகள் உயிரிழந்த வழக்கை இப்படித்தான் அலட்சியமாக கையாள்வீர்களா? என உத்தரப்பிரதேச மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் சாதாரண நபர் என்றால் இதற்குள் கைதுசெய்திருக்கமாட்டீர்களா? எனவும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

லக்கிம்பூர் வன்முறைச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரின் விசாரணைக்கு ஆஜராக மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ராவுக்கு அவகாசம் தந்திருப்பதாக உத்தரப்பிரதேச அரசு அறிவித்திருந்தது.

'விவசாயிகள் படுகொலையில் முக்கியமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரை இன்னும் கைது செய்யாமல், இன்று ஆஜராகுங்கள் நாளை ஆஜராகுங்கள் என கெஞ்சி கொண்டிருக்கிறீர்கள். ஒரு சாதாரண பொதுமகனையும் நீங்கள் இப்படித்தான் கையாண்டிருப்பீர்களா? லக்கிம்பூர் விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணையும்கூட தீர்வாக இருக்காது' என உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.



# வடக்கு - கிழக்கினை அபிவிருத்தி செய்யும் திட்டம் கூட்டமைப்பிடம் உள்ளது என்கிறார் சாணக்கியன்



வடக்கு – கிழக்கிலுள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டை நடத்தி செல்ல வருமானம் அதிகமாக இருக்க வேண்டும். செலவு குறைவாக இருக்கவேண்டும். சாதாரணமாக கூறுவது என்றால் நாட்டில் பணம் இருக்க வேண்டும்.

உலகில் ஷ்டீவ் ஜொப்ஸ். பில்கேடஸ், ஜெக் மார்க் போன்ற மில்லியனர்கள், பில்லியனர்கள் தமது திறமையால், உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், எமது நாட்டில் மில்லியனர்கள் அதிகளவில் உள்ளனர்.

திருட்டுகளின் ஊடாக மில்லியனர்கள் ஆனவர்கள் உள்ளனர். அவர்களின் திருட்டுகளுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் உள்ளனர். திறமையால் முன்னேறியவர்களும் இருக்கின்றனர்.

எனினும், அரசியல்வாதிகள் உதவியுடன் பணம் சம்பாதித்தவர்களே அதிகளவானவர்கள் உள்ளனர். அண்மைய காலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்துக்குள் பில்லியன் கணக்கில் இலாபம் பெற்ற தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவ்வாறு முடியும் என்றால், அரசுக்கு வருமானம் குறைவடைந்தமை குறித்து அரசாங்கம் தேடியறிய வேண்டும்.

அரசு வழங்கிய வரிச் சலுகைகள் காரணமாக பொதுமக்களைவிட நிறுவனங்களே அதிகளவில் நன்மை பெற்றன. இன்று சீமெந்து, பால் மா, கேஸ் உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன. சீனி மோசடி, வெள்ளைப்பூடு மோசடி என்று மோசடிகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

நான் விமர்சிக்கவில்லை. வரிச்சலுகை வழங்கப்படுவதால் சாதாரண மக்கள் மீதே தாக்கம் செலுத்துகின்றது. பாரிய நிறுவனங்கள் பாதிக்கப்படுவதில்லை.

எனவே தான், பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கும் வகையிலான வரிச்சலுகை முறையினரை அறிமுகப்படுத்துமாறு நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றோம்.

காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வழங்க 2019 ஏப்ரல் பட்ஜட்டில் முன்மொழியப்பட்டது. இன்றுவரை 153 குடும்பங்களுக்கு மாத்திரம் அந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்தக் கொடுப்பனவும் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பிறகு வழங்கப்படவில்லை. காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும், அதனை செய்யும் வரை அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதற்காக மரண சான்றிதழ் வழங்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் வரை இந்தத் தொகை அந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கு – கிழக்கில் உள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எம்மிடம் உள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு – கிழக்கில் உங்கள் அருகில் வைத்திருந்த அந்த நபர்கள் செய்த மோசடிகள், திருட்டுகள் காரணமாகவே நீங்கள் பாரிய தோல்வியை அந்தப் பகுதிகளில் சந்திக்க நேரிட்டது. இன்றும் அதுதான் நடக்கப் போகின்றது.

நிதியமைச்சரின் கட்சியைச் சேர்ந்த மூவரின் பெயரில் மட்டக்களப்பு மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் உள்ளது. பீ.சந்திரகுமார் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர்.

அடுத்தது, சதாசிவம் மயுரன் வியாழேந்திரனின் தம்பி, அடுத்தது, சிவநேசத்துரை சந்திரகாந்தன். இந்த தகவல்களை நாடாளுமன்றில் தான் நான் பெற்றுக்கொண்டேன்.

நாங்கள் நிதியமைச்சருடன் வடக்கு – கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இணைந்து செயற்பட தயாராக உள்ளோம். எம்மிடம் சிறந்த முன்மோழிவுகள் உள்ளன. மாவட்ட ரீதியில் சில முன்மொழிவுகளை கூட எம்மால் வழங்க முடியாது உள்ளது. எனவே எமது திட்டங்களை முன்மொழிய எமக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## யுனிசெவ் நிகழ்வுக்கு தெரிவு செய்யப்பட்ட ஐவருள் ஒருவராக மட்டு மாநகர முதல்வர்!



உலகலாவிய ரீதியில் யுனிசெவ் நிறுவனத்தால் நடாத்தப்படும் Cities Inspire awards நிகழ்வுக்கு உலகலாவிய ரீதியில் தெரிவாகியுள்ள 5 மாநகர முதல்வர்களுள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவனும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் Cities Inspire awards நிகழ்வானது எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அந்நிகழ்வில் அன்று உரையாற்றுவதற்காக உலகின் 5 மாநகர முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறித்த அந்த நிகழ்வில் உரையாற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஐவருள் ஒருவராக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவாகியுள்ளார்.

யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் நேய மாநகர திட்டத்தினை இலங்கையில் அமுல்படுத்துவதற்காக மட்டக்களப்பு மாநகர சபை கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த திட்டத்தினை மிகவும் ஆக்கபூர்வமாகச் செயற்படுத்தியமைக்காக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவனுக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் தெற்காசியாவில் இருந்து தெரிவாகியுள்ள ஒரே ஒரு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மாநகர முதல்வர் தெரிவிக்கையில், இந்த கௌரவத்தினை மாநகரசபையின் கௌரவ உறுப்பினர்கள், பலவிதமான தடைகள் எல்லாவற்றையும் தாண்டி குறித்த திட்டத்திற்காக உழைத்த மாநகரசபை உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் எமது சபையின் முதுகெலும்பாக திகழும் ஊழியர்களுக்கு சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.



## சாய்ந்தமருது பிரதேசத்தில் பி.சி.ஆர்., அண்டிஜன்கள்

கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முகமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் பி.சி. ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் டாக்டர் யூ.எல்.எம்.நியாஸின் தலைமையில்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. நிஸ்தார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான பைசல் முஸ்தபா, ஏ. எல் . எம். அஸ்லம்,சுகாதார உத்தியோகத்தகர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக பல நோக்கு செயலணியினர் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து சாய்ந்தமருது பிரதான வீதியில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 40 பேருக்கு நேற்று குறித்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட வேளை கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முகாமாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் பி . சி. ஆர்., அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ச்சியாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் டாக்டர் யூ.எல்.எம்.நியாஸ் தலை மையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காடுமண்டி புதர்பிடித்து அழிவுற்ற ஆலயம் பார்க்க படையெடுக்கும் அம்பாறை மக்கள்

பல நூற்றாண்டுக் காலம் பழைமை வாய்ந்த நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் புராதன ஆலயமே இவ்வாறு காடுமண்டி புதர்பிடித்து சிதைந்து அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்திற்குட்பட்ட வயற் பிரதேசத்தில் இப்பழம் பெரும் ஆலயம் காணப்படுகிறது.அருகில் தற்போதைய ஆலயம் மரங்களால் நிறைந்த சோலையில் உள்ளது. பூரணை தினங்களில் அங்கு கூடும் பக்தர்களுக்கு அளவேயில்லை.அதனருகே புதிதாக கட்டப்பட்ட ஆலயம் விரைவில் குடமுழுக்கு காணவிருக்கிறது.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கடந்தவாரம் அங்கு விஜயம் செய்து இப்புராதன ஆலயத்தைப் பார்வையிட்டார். அவருடன் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் ,கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், இந்து சமய விருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா ,இந்துசமயகலாசார மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பிரமுகர்கள் அதனைப் பார்வையிட்டனர்.

இது சோழர்கால ஆலயத்தின் சிதைவுகளாக இருக்கலாமென கருத்து தெரிவிக்கப்பட்டதுடன். இது புராதன சின்னமாக பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கூறப்பட்டது. அதிலுள்ள செங்கல்லின் அளவு வழமையான செங்கல்லின் அளவைவிட பருமனானது.






# 235 ஓட்டங்களைக் குவித்தும் மும்பை வெளியே
# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது கொல்கத்தா

ஐ.பி.எல்.தொடரின்நேற்றையலீக்போட்டியொன்றில் மும்பை இந்தியன்ஸ் அணி 42 ஓட்டங்களால் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை வென்றது. இந்தப் போட்டியில் மும்பை அணி வெற்றிபெற்றிருந்தாலும் பிளே ஒவ் சுற்றுக்கான வாய்ப்பை அந்த அணியால் பெற முடியவில்லை.

அபுதாபியில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி, தனது நிகர ஓட்ட வீதத்தை உயர்த்தும் நோக்கில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைக் குவித்தது. இசான் கிசான் 84 ஓட்டங்களையும் சூர்ய குமார் யாதவ் 82 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஹைதராபாத் அணியின் ஜேஸன் ஹோல்டர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணியால், 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களையே பெற முடிய, மும்பை இந்தியன்ஸ் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மனிஷ் பான்டே 69 ஓட்டங்களையும் ஜேஸன் ரோய் 34 ஓட்டங்களையும் எடுத்தனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் ஜேம்ஸ் நீம், நதன் குல்டர் நெய்ல் மற்றும் பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இசான் கிசான் தெரிவானார்.

பெரியதொரு ஓட்ட எண்ணிக்கை இந்தப் போட்டியில் எடுத்திருந்தாலும், நிகர ஓட்ட வீதம் போதாமையால் மும்பை அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழக்க, கொல்கத்தா அணி தனது வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டது.




# இறுதிப் பந்தில் பரத் அசத்தல் சிக்ஸர் டெல்லியைச் சாய்த்தது பெங்களூர்

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய மற்றுமொரு லீக் போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்ளூர் அணி, டெல்லி கப்பிட்டல்ஸ் அணியுடனான விறுவிறுப்பான போட்டியின் இறுதிப்பந்தில் வெற்றியைத் தனதாக்கியுள்ளது.

டுபாயில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்ளூர் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, 20ஓவர்கள்நிறைவில்5விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.ப்ரித்விஷா48ஓட்டங்களையும் தவான் 43 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் சிராஜ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங்ளூர் அணி ஆரம்ப விக்கெட்டுக்களை விரைவாக இழந்தாலும் ஸ்ரீகர் பரத், க்ளென் மக்ஸ்வெல் இருவரதும் பொறுமையான ஆட்டத்தின் உதவியோடு வெற்றியிலக்கைத் துரத்தி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இறுதிப் பந்தில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், சிக்ஸரை விளாசிய ஸ்ரீகர் பரத் தனது அணியை வெற்றிபெறவைத்தார். ஸ்ரீகர் பரத், மக்ஸ்வெல் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 78, 51 ஓட்டங்களை எடுத்தனர். டெல்லி அணியின் பந்துவீச்சில், அன்ரிச் நோர்ட்ஜே 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரீகர் பாரத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளும் ஏற்கனவே அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியிருந்த நிலையில் இந்தப்போட்டி, ரசிகர்களுக்கு பரபரப்பான அனுபவத்தைத் தந்திருந்தது.

# ரசிகர்களுக்கு நன்றி கூறிய வோர்னர் இன்ஸ்டாவில் உருக்கமான பதிவு



சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் முன்னாள் தலைவர் டேவிட் வோர்னர் இன்ஸ்டாகிராமில் உணர்ச்சிபூர்வமான பதிவை வெளியிட்டு, அதில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தின் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக ஹைதாராபாத் அணி நடப்பு ஐ.பி.எல். சீசனின் இறுதிப் போட்டியில்நேற்றுவிளையாடியநிலையில், இந்தப் பதிவினை அவர் வெளியிட்டுள்ளார்.

செப்டெம்பர் 25 அன்று ஹைதராபாத் அணிக்காக அவர் தனது கடைசிப் போட்டியை பஞ்சாப் கிங்ஸுக்கு எதிராக விளையாடினார். அதன் பிறகு நடைபெற்ற போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை. தற்போதைய சீசனில் தனது ஆட்டத்தில் தடுமாறிவந்த வோர்னர், முதலில் அணித்தலைவர் பதவியை இழந்தார். இந்த ஆண்டு ஐ.பி.ல். தொடரில் 8 போட்டிகளில் இரண்டு அரைச் சதங்களுடன் 195 ஓட்டங்களை மட்டுமே எடுத்த அவர், விளையாடும் பதினொருவரிலிருந்தும் கழற்றி விடப்பட்டார். அதன்பின்னர், அவரே இனிதான்ஹைதராபாத்அணிக்காக விளையாடமாட்டேன்எனதெரிவித்திருந்தார். வோர்னர் தன்னுடைய நேற்றைய இன்ஸ்டா பதிவில், ‘அற்புதமானநினைவுகளைஉருவாக்கிய உங்களுக்கு எனது நன்றிகள். எங்களுடைய ரசிகர்களே, எங்கள் அணிக்கு தொடர்ந்து ஆதரவளித்து 100சதவீதஉந்துசக்தியாகஇருந்தது நீங்கள்தான். நீங்கள் அளித்து வந்த ஆதரவுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை. இது ஒரு சிறப்பான பயணமாக இருந்து வந்தது. நானும் எனது குடும்பத்தாரும் உங்களை தவறவிடப் போகிறோம்’ என்று உருக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

டேவிட் வோர்னர் ஐ.பி.எல்லில் 150 போட்டிகளில் விளையாடி 5,449 ஓட்டங்களை எடுத்திருக்கிறார். 2014 ஆம் ஆண்டில் ஹைதராபாத் அணியில் இணைந்ததிலிருந்து அவர் இரண்டு சதங்களையும் நாற்பது அரைச்சதங்களையும் அடித்துள்ளார். 2016 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் ஹைதராபாத் அணி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை வீழ்த்தி கிண்ணத்தை வென்றபோது அந்த அணிக்கு தலைவராக இருந்தவர் வோர்னர் என்பது குறிப்பிடத்தக்கது

# பாகிஸ்தான் ரி-20 உலகக் கிண்ண அணியில் மூன்று மாற்றங்கள்

ரி-20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் குழுவில் மூன்று மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. பகர் சமான், சர்பராஸ் அஹ்மட் மற்றும் ஹைதர் அலி ஆகியோர் மாற்று வீரர்களாக அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக வீரராக இருந்த பகர் சமான், பிரதான குழாமில் இருந்த குஷ்டில் ஷாவினை பிரதியீடு செய்திருக்கின்றார். குஷ்டில் ஷா மேலதிக வீரராக மாற்றப்பட்டிருக்கின்றார். சர்பராஸ் அஹ்மட் மற்றும் ஹைதர் அலி இருவரும் அஸாம் கான் மற்றும் மொஹமட் ஹஸ்னைன் ஆகியோரினை பிரதியீடு செய்திருக்கின்றனர்.

இந்த மாற்றங்கள், பாகிஸ்தானில் நடைபெற்று வரும் நஷல் ரி-20 தொடரில் வீரர்கள் வெளிப்படுத்திய ஆற்றலை வைத்து மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட தேர்வாளர் மொஹம்மட் வசீம் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேநேரம் இந்தத் தொடரில் விளையாடும்போது காயமடைந்திருக்கும் சொஹைப் மசூட்டின் நிலை குறித்து மருத்துவ அறிக்கைகள் கிடைத்தபின்னர் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி-20 உலகக் கிண்ணத்திற்கான சூப்பர் 12 சுற்றுக்கு நேரடியாகத் தகுதி பெற்று குழு 1 இல் உள்ள பாகிஸ்தான் அணி, தனது முதல் போட்டியில் எதிர் வரும் 24 ஆம் திகதி இந்திய அணியை எதிர் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நடேசனின் கணக்கில் மஹிந்தவிற்காக 76 லட்சம் டொலர் செலவிட்ட சீனா!

## அநுர குற்றச்சாட்டு



சீன நிறுவனங்கள் திருக்குமரன் நடேசனின் கணக்குகளின் ஊடாக இலங்கையின் முக்கிய தேர்தல்களுக்கு செலவிட்டுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

பண்டோரா பேப்பர்ஸ் நிதி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிருபமா ராஜபக்ஷவின் கணவரே நடேசன் என்பது குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றில் உரை யாற்றிய போது ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக நடேசனின் கணக்குகளுக்கு 50 லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வைப்பிலிடப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் ஆரம்பிக்கப்பட்ட நில்வலா அபிவிருத்தி திட்டத்துக்காக சீன நிறுவனத்துக்கு தேர்தல் அண்மித்த நாள்களில் 400 கோடி ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் சீ. ஏ. எம்.சீ. என்ற பொறியியல் நிறுவனத்துக்கு இந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த சீன நிறுவனம், ஹொங்கொங்கில் இயங்கி வரும் ரெட்ரூத் இன்வெஸ்ட் மன்ட் நிறுவனத்துக்கு பணம் செலுத்தியுள்ளது.

இந்த ரெட்ரூத் நிறுவனத்தின் உரிமையாளர் வேறு யாருமல்லர், நடேசனாவார். இந்த விடயங்கள் பற்றி பேசுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை. அது எனக்குத் தெரியும், தற்பொழுது விசாரணைகள் என்பது உண்மையில் என்ன?

எங்களது விசாரணைகள் என்பது உண்மைகளை மூடி மறைத்தல் மற்றும் குற்றவாளிகளை விடுதலை செய்தலாகும். சீன ஹார்பர் நிறுவனம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மானித்துள்ளது. துறைமுகத்தை நிர்மானிப்பதற்காக 130 கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது. இந்த சீன ஹார்பர் நிறுவனம் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவிற்காக 76 லட்சம் டொலர்களைச் செலவிட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் காசோலைகள் உள்ளிட்ட ஆதாரங்களை நான் சமர்ப்பித்துள்ளேன். இலங்கையில் நடைபெறும் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் வேட்பாளருக்கு ஏன் சீன நிறுவனம் பணம் வழங்குகின்றது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஊழல் மோசடிகளே பிரதான காரணியாகும். நிதி அறிக்கைகளில் எவ்வாறான விடயங்கள் கூறப்பட்டாலும் நாட்டில் ஒரு கறுப்பு பொருளாதாரம் இருக்கின்றது.

இந்த கறுப்பு பொருளாதாரத்துக்குத் தீர்வு காணாவிட்டால் எவ்வாறான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்தாலும் அதில் பயன் இருக்காது என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம்!

## கையளித்தது இராணுவம்

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம், இராணுவத்தினரால் நேற்று (வெள்ளிக்கிழமை) கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பிலபிரிலய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வைத்தியசாலை பணிப்பாளர் சுகந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைக்கான ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம் வைத்தியசாலை அதிகாரிகளிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன் கூறுகையில் -

தற்பொழுது மாவட்டத்தில் கொரோனா அபாய நிலைமை தணிந்துள்ளது. ஆனாலும் இவ்வாறான உதவிகள் எமக்கு இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

ஆகவே உதவிகளை வழங்கிய இராணுவத்தினருக்கு நாம் நன்றிகளை சொல்கின்றோம். இதேவேளை இராணுவத்தினரிடம் மற்றுமொரு உதவியையும் எதிர்பார்க்கின்றோம்.

எமது வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் குருதிக்கொடை வழங்குமாறு படையினரிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேவேளை, எமது வைத்தியசாலைக்கான ஒட்சிசன் சிலிண்டர்கள் 150 வரை தேவைப்படுகின்றன. தற்பொழுது 105 சிலிண்டர்களே காணப்படுகின்றன. மேலதிகமாக தேவை உள்ள நிலையில் அதனையும் பெற்றுத்தருவதற்கு எதிர் பார்க்கின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பித்துப்பிடித்தவர்போன்று பிதற்றுகின்றார் வீரசேகர!

## பொன்சேகா சாட்டை



பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர விசரனைப் போன்று பிதற்றுகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும்கூறுகையில்-

நான் ஒரு நல்ல சிங்கள பௌத்தன், அண்மையில் பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் ஊடகங்களில் பயங்கரவாதம் பற்றிப் பேசினார். நான் அவரின் காலில் விழுந்து கேட்கின்றேன் இந்த நாட்டை அழிக்க வேண்டாம்,

தர்கா நகரில் இடம்பெற்றது போன்று நாட்டில் பீதியை ஏற்படுத்த வேண்டாம். பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பித்துப் பிடித்தவர் போன்று பிதற்றுகின்றார். உங்களுக்கு அதனைவிட நல்ல ஒருவரை தெரிவு செய்ய முடியவில்லையா?

குறைந்தபட்சம் இந்தப் பதவியை தயாசிறி ஜயசேகரவிற்கேனும் வழங்குங்கள். பொதுப் பாதுகாப்பு அமைச்சரும் ஞானசார தேரரை பின்பற்றிச் செல்கின்றார். குரங்கு கையில் பூமாலை கிடைத்தது போன்றுதான் இந்த அமைச்சுப் பதவி.

லொஹான் ரத்வத்தே துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சிறைச்சாலைக்கு செல்கின்றார். அமைச்சர், பியூமி ஹன்சமாலியுடன் செல்கின்றார், லொஹான் புஸ்பிகா டி சில்வாவுடன் செல்கின்றார்.

இது சரியில்லை, இது நாட்டின் பெயருக்கு களங்கத்தை உருவாக்கும். பண்டோரா பேப்பர்ஸ் மூலம் யார் திருடுகின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது எனவும், மருந்துப் பொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டாம் எனவும் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

# தனக்கென தனித்துவ அடையாளத்தை கிளிநொச்சியில் பதித்தவர் சந்திரசேகரம்!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இரங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தில் தனக்கென்றோர் தனித்துவமான அடையாளத்தைப் பதித்து, அதன்வழி எல்லோராலும் அறியப்பட்ட சண்முகம் சந்திரசேகரம் (சந்திரண்ணை) இன்றையதினம் இறையடி சேர்ந்திருப்பது எம்மால் ஏற்க முடியாத இழப்பாக நிகழ்ந்தேறியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜெயந்திநகர் கிராமத்தின் அத்தனை வளர்ச்சிப் பரிமாணங்களிலும் உடனிருந்து உழைத்த அவர், சமய, சமூக நேயம் மிக்க பல்வேறு பணிகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த ஒரு அறப்பணியாளன். தான் ஆற்றிய அரும்பணிகளினூடு அந்த ஊர் மக்களின் மனங்களில் நன்மதிப்பைப் பெற்ற ஓர் வழிகாட்டியாகவே சந்திரண்ணை தன் இறுதிக்கணம் வரை எல்லோராலும் அறியப்பட்டிருந்தார்.

அவர் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்திலேயே எனக்கும் அவருக்குமான அறிமுகம் நிகழ்ந்தது. கூட்டுறவுப் பணியில் இணைந்திருந்த இருவருக்கிடையே சாதாரணமாக ஆரம்பித்த அந்த நட்பு, காலம் செல்லச்செல்ல, களங்கமற்ற அன்புகொண்ட, ஆத்மார்த்தமான உறவொன்றை எனக்கும் அவருக்குமிடையே இயல்பாய் தோற்றுவித்ததும், அந்த உறவுநிலை இறுதிவரை தொடர்ந்ததும் இறைவனின் செயலே!

சிறந்த கூட்டுறவாளனாய், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் முகாமையாளராய், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் முன்னாள் தலைவராய், தற்போதைய உபதலைவராய், கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம் என்பவற்றின் தலைவராய் இருந்து அவர் எமது மாவட்டத்துக்கு ஆற்றியுள்ள சமய, சமூகப் பணிகளுக்கு அப்பால், என்மீது தனிப்பட்ட ஆழ்மன அன்பும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீது அளவற்ற பற்றும் கொண்டு அவர் ஆற்றிவந்த அரசியற்பணிகளும் அவரது மறைவின் பின்னும் அவரை மனங்கொள்ளப் போதுமானவை.



நியாயமற்ற எல்லாச் செயல்களையும் கேள்விக்குட்படுத்தும் துணிச்சலும், எதையும் நேருக்கு நேர் சொல்லிவிடுகின்ற நெஞ்சுரமுமே மற்றவர்களிலிருந்து அவரை தனித்துக் காட்டும் தனிச்சிறப்பான அடையாளங்கள். அத்தகைய ஆளுமை மிக்க பெரு மனிதனாக, அன்பு மிக்க சகோதரனாக, என்னை ஆத்மார்த்தமாய் அன்புசெய்த சந்திரன் அண்ணையின் திடீர் மறைவு தீராத்துயரைத் தந்தாலும், அவற்றையெல்லாம் கடந்து அவரது ஆத்மா அமைதிபெற மீனாட்சியம்மனின் திருப்பாதங்களைப் பணிந்து, அவரது இழப்பின் வலி சுமந்து நிற்கும் குடும்பத்தினரின் துயரில் நானும் பங்கெடுக்கிறேன். -என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2021இல் வெளியிடப்பெற்றது.